தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 21, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு, 2023

1992 ஏப்ரல் 3, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

பெருமைக்குரிய பண்புகளுக்குரியோர் செய்தற்கரிய செயல்களைச் செய்தற்கானஏற்ற வழிகளில் செய்து முடிக்கக் கூடியவர் ஆவர்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 455, திரு. செ. பெருமாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

455—

வாழப்பாடியில் தாலுகா அலுவலகம்.

*3987 திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சேலம் தாலுகாவைப் பிரித்து, வாழப்பாடியில் தாலுகா அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இச் செயற்குறிப்பு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அவரது அறிக்கை கிடைத்த பிறகு அரசால் முடிவெடுக்கப்படும்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி, வாழப்பாடிக்கு வருகைதரும் போது வாழப்பாடியை மையமாக வைத்து தாலுகா அலுவலகம் அமைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்தரவினை மிக விரைவில் நிறைவேற்றி வைப்பதற்கு, அமைச்சர் அவர்கள் முன் வாருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற அந்த இடம் சுமார் 4 உள் வட்டங்களும், 64 வருவாய் கிராமங்களும், ஜமீன் தாருடைய கிராமங்களாக இருந்தன. அதை இன்றைக்குத் தனியாக ஆதீன மேலாளர், அதாவது 'எஸ்டேட் மேனேஜர்' பார்த்துக் கொண்டு இருக்கிறார். அதாவது துணை வட்டாட்சியர். இது இன்றைக்கு சேலத்தில் இருக்கிறது. சேலத்தில் இருக்கிற இந்த எஸ்டேட் மேனேஜரை, அதாவது துணை வட்டாட்சியரை அங்கே மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. மாற்ற வேண்டும் என்று மட்டுமல்ல. அதை வட்டாட்சியர் அலுவலகம் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டும் என்றும் இருக்கிறது. அரசு இதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஏழை எளிய மக்கள் மற்றும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் சேலத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிற ஆதீன மேலாளர் அலுவலகத்தை, வாழப்பாடியில்—இடம் தருகிறார்கள் அங்கே—அமைத்தால் நல்ல முறையில் இயங்குவதற்கு பொதுமக்கள் உறுதுணையாக இருப்பார்கள். எனவே, அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதனால்தான் அந்தச் செயற்குறிப்பு ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம், வாழப்பாடியிலேயே இருக்க வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், தானைத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களுடைய ஊரில் இந்தத் தாலுக்காவை அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த அறிவிப்புக்கு மிக்க நன்றி

1992 ஏப்ரல் 3]

யினை மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக, இதய பூர்வமாக தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி உடனடியாக அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய உத்தரவுப்படி நாங்கள் எப்போதும் நடப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

456—

வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

*4095 திரு. ஆ. சுப்புரத்தினம் :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வணிகர் நல வாரியத்தில் (Traders welfare Board) இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவ்வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து இன்னும் அதிக அளவிற்கு விளம்பரம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வணிகர் நல வாரியத்தில் இதுவரையில் 3,147 வணிகர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்,

(ஆ) இந்த வாரியத்தின் நலன் குறித்து, தமிழ்ப் பேப்பர்களில் வெளியிடப்பட்டுள்ளது,

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு எவ்வளவு கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசில் வணிகர்களாகப் பதிவு செய்து கொள்பவர்கள், ஆண்டுச் சந்தாவ 25 ரூபாய் செலுத்தி உறுப்பினர்களாக ஆகலாம்,